# தஞ்சாவூர் மாநகராட்சி

## மாமன்றக் கூட்ட தீர்மான நகல்

<table>
<tr><th>Date of Meeting</th><th>Serial Number and subject in the Agenda<br>(URGENT MEETING)</th><th>Decision of the City Corporation</th></tr>
<tr><td>08.03.2024</td><td>
649. தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள ஆண்டு உரிம இனத்திற்கு பொது ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>கடை எண்.</th><th>ஏலதாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஏல கேள்விகள் (ரூ.)</th><th>தற்போதைய உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி தொகை (ரூ.)</th></tr>
<tr><td colspan="5">ஆண்டு உரிம இனங்கள்</td></tr>
<tr><td>1</td><td colspan="3">திருவள்ளுவர் திரையரங்க வளாகம் அருகில் உள்ள இடத்தில் பல்லடுக்கு வாகனங்கள் நிறுத்த பயன்படுத்தி கொள்ளும் உரிமம் (முற்றிலும் தற்காலிகமாக)</td><td>புதிய இனம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
வரிசை எண்.1ல் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள இனத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9031/2023/எம்சிஏ3)
</td><td>அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>08.03.2024</td><td>
650. தஞ்சாவூர் மாநகராட்சி மண்டலம்-I வார்டு எண்.9க்கு உட்பட்ட பொன்னி நகர் பகுதியில் அம்ரூத் 2015-16 திட்ட நிதியின் கீழ் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தற்போது சோதனை முறையில் குடிநீர் விநியோகப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் செய்யப்படும் குழாய் பதிக்கப்பட்டு 15-வருடங்களுக்கு மேலாகிவிட்டபடியால் குடிநீர் குழாய் பழுதடைந்து ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வருகிறது. இதனை சரி செய்வதற்கு, பாலோபநந்தவனம் மெயின்ரோடு, கும்பகோணத்தான் தெரு, KMS நகர், பொன்னி நகர் மற்றும் மீரான் நகர் பகுதிகளில் புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க வேண்டியுள்ளது. தற்போது கோடைக்காலம் துவங்க இருப்பதை முன்னிட்டு குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்படி
</td><td>அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | பகுதியில் உள்ள பழுதடைந்த குடிநீர் குழாயினை அகற்றிவிட்டு புதிதாக 110mm Dia மற்றும் 160mm Dia HDPE குழாய் பொருத்தும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.21,00,000/-க்கு (ரூபாய் இருபத்தி ஒன்று இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.21,00,000/-க்கு (ரூபாய் இருபத்தி ஒன்று இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து 15th CFC திட்டநிதி 2021-22ல் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.962/2024/எம்சிஇ1) | |
| 08.03.2024 | 651. தஞ்சாவூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை பணிகளை போர்க்கால அடிப்படையில் கையாண்டு கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொள்ளுதல், குடிநீரில் பாதாள சாக்கடை கழிவுநீர் கலத்தல் போன்ற அசம்பாவிதங்களை தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்கள் நலன் கருதியும், தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நான்கு மண்டலங்களில் வார்டு எண்.1 முதல் 51 வரையிலான பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல், பாதாள சாக்கடை ஆழ்இறங்கு குழி மற்றும் குழாய்களில் உள்ள மண்களை அள்ளுதல், அப்புறப்படுத்துதல், கழிவுநீர் நீறுந்து நிலையம் மற்றும் கழிவுநீர் நீரேற்று நிலையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை ஓராண்டு மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.120.00 இலட்சத்திற்கு (ரூபாய் நூற்றி இருபது இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.120.00 இலட்சத்திற்கு (ரூபாய் நூற்றி இருபது இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2826/2024/எம்சிஇ3) | அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

<table>
<tr>
<td>08.03.2024</td>
<td>652. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் படி மக்களுடன் முதல்வர் என்ற திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்அடிப்படையில் மேற்படி முகாமிற்கு ஆன்லைன் பரிவர்த்தனை செய்வதற்கு ஏதுவாக தற்காலிகமாக 45 எண்ணிக்கையிலான FTTH வசதி கொண்ட தொலைபேசி மற்றும் இணையதள வசதி அமைத்து தரும் பணிக்கு கட்டணத்தொகை ரூ.95535/- செலுத்தக்கோரி BSNL நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றது. எனவே மேற்படி BSNL நிறுவனத்திற்கு தொகை செலுத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.16860/2024/எம்சிஇ5)</td>
<td>அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>08.03.2024</td>
<td>653. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.40 அருளானந்தம்மாள் நகர் பகுதியில் மாநகர பொறியாளர் தங்குவதற்கு ஏதுவாக புதிய குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணி மற்றும் சோழன் நகர் வாரி அருகில் உள்ள காலி இடத்தில் கழிவுநீர் சேகரிப்பு கிணறு, பிரதான குழாய் மற்றும் மோட்டார்கள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாலைமலர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டண தொகை ரூ.9744/-ஐ தினசரி நாளிதழுக்கு வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ்களின் பெயர்</th><th>பட்டியல் எண் / நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>மாலை மலர், தஞ்சாவூர்</td><td>15.02.2024</td><td>9744.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
2. மேற்கண்ட பணியினை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3. மேற்கண்ட தினசரி நாளிதழுக்கு கட்டணத்தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.18474/2023/எம்சிஇ5
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.03.2024</td>
<td>
654. தஞ்சாவூர் மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டப்பணிகளின் கீழ் 3-எண்ணிக்கையிலான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ்முரசு, திருச்சி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டண தொகை ரூ.15649/-ஐ தினசரி நாளிதழுக்கு வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ்களின் பெயர்</th><th>பட்டியல் எண் / நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.42 TPS நகர் 1வது மெயின் ரோடு தார்ச்சாலை அகலப்படுத்தும் பணி</td><td rowspan="3">தமிழ்முரசு, திருச்சி</td><td rowspan="3">3300474736 / 15.02.2024</td><td rowspan="3">15649/-</td></tr>
<tr><td>2.</td><td>குந்தவை நாச்சியார் அரசு கலைக்கல்லூரிக்கு 6.00 FEET STAINLESS STEEL DESK AND BENCH 200 எண்ணிக்கை வாங்கி வழங்கும் பணி</td></tr>
<tr><td>3.</td><td>பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் பெண்கள் விடுதி கட்டும் பணி</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்கண்ட விளம்பரக்கட்டணத்தொகையினை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியின் கீழ் வழங்குவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.3888/2023/எம்சிஇ5
</td>
<td>அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>08.03.2024</td>
<td>655. இம்மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 4 கணினி வரிவசூல் மையங்கள், 4 பிறப்பு இறப்பு சான்று வழங்கும் மையங்கள் மற்றும் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பராமரிப்பு பணி (AMC) 31.12.2023 அன்றுடன் முடிவடைகிறது.</td>
<td>அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 1. கணினி – 71 எண்ணிக்கை<br>2. மடிக்கணினி – 11 எண்ணிக்கை<br>3. லேசர் பிரிண்டர் – 26 எண்ணிக்கை<br>4. Multi Function Printer (MFP) – 13 எண்ணிக்கை<br>5. DOT Matrix பிரிண்டர் – 8 எண்ணிக்கை<br>6. ஸ்கேனர் – 3 எண்ணிக்கை<br>7. UPS – 34 எண்ணிக்கை<br>எனவே மேற்கண்ட கணினி மற்றும் அதன் உதிரி பாகங்களை பராமரிப்பு பணிகள் (01.03.2024 முதல் 30.06.2024 வரை) 4-மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து அதே ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ள (உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு பணிகள் உட்பட) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு அதே மதிப்பீட்டு விலைவிகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1709/2020/எம்சிஇ5) | |
| 08.03.2024 | 656. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள சாலைகள் ஆங்காங்கே பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறாகவும் உள்ளது. மேலும் தற்போது மழைக்காலமாக உள்ளதினால் பொதுமக்கள் நலன்கருதியும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும், மேற்படி வார்டு எண்.1 முதல் 51 வரையிலான வார்டுகளில் உள்ள சாலைகளில் ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.20,00,000/- க்கு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) 01.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. | அலுவலககுறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது |

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திரு.T.கார்த்திகேயன், தஞ்சாவூர் | 1647039.00 | மதிப்பீட்டு தொகையை விட (-)0.03% குறைவு |
| 2. | M/S.SPP INFRA, THANJAVUR | 1672780.00 | மதிப்பீட்டு தொகையை விட (+)1.51% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டுத் தொகையான (-)0.03% குறைவாக ரூ.491924/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.கார்த்திகேயன், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.546-2/2024/எம்சிஇ5)

**08.03.2024**

657. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 51 வரையிலான வார்டுகளில் மாடுகள் சாலைகளில் ஆங்காங்கே சுற்றித்திரிவதினால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. இதனால் விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. இதனை தடுக்கும் பொருட்டு மாடுகளை பிடித்து வாகனங்களில் ஏற்றுவதற்கு ஏதுவாக 4 எண்ணிக்கையிலான சாய்வுதளம் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,10,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி பத்தாயிரம் மட்டும்) 01.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | திரு.B.பாரி, தஞ்சாவூர் | 109800.00 |
| 2. | திருமதி.G.ஜீவா, தஞ்சாவூர் | 110800.00 |

அலுவலககுறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.109800/- என்ற விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.B.பாரி, தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.13114/2023/எம்சிஇ5)

**08.03.2024**

658. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.40 அருளானந்தம்மாள் நகர் பகுதியில் மாநகர பொறியாளர் தங்குவதற்கு ஏதுவாக புதிய குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.50,00,000/-க்கு (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) 01.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | M/S.THANVI ENGINEERING CONSORTIUM, THANJAVUR | 4207832.78 | மதிப்பீட்டு தொகையை விட (+) 10.61% அதிகம் |
| 2. | M/S.EVER GREEN ENTERPRISES, THANJAVUR | 4322879.66 | மதிப்பீட்டு தொகையை விட (+) 11.62% மிக அதிகம் |

இவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப கூராய்வு மேற்கொள்ளப்பட்டதில் M/S.THANVI ENGINEERING CONSORTIUM, THANJAVUR என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மட்டும் உரிய தொழில்நுட்ப தகுதி உடைய ஒப்பந்தப்புள்ளியாக தொழில்நுட்ப கூராய்வு குழுவினரால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் நிறுவனத்தின் விலைப்புள்ளியானது இப்பணிக்கான திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி விலைவிகிதம் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட 10.61% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் விலைக்குறைப்பு செய்து தர வேண்டி ஒப்பந்ததாரருக்கு 04.03.2024ம் தேதியன்று விலைக்குறைப்பு கடிதம் (Negotiation Letter) வழங்கியதில் மேற்படி ஒப்பந்ததாரர் 04.03.2024ம் தேதியன்று 0.39%க்கு விலைக்குறைப்பு செய்துதர சம்மத கடிதம் அளித்துள்ளதை அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலககுறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | M/S.THANVI ENGINEERING CONSORTIUM, THANJAVUR | 3746589.48 | மதிப்பீட்டு தொகையை விட (-) 0.39% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.18474/2023/எம்சிஇ5)

**08.03.2024**

659. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 செக்கடி உரக்கிடங்கு மேற்கு பகுதியில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு மாமன்ற தீர்மான எண்.358, நாள்.27.07.2022ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி சீரான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு மேற்படி பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.9,00,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) 14.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திரு.S.ரமேஷ், தஞ்சாவூர் | 7,42,137.90 | மதிப்பீட்டை விட (-) 0.07% குறைவு |
| 2. | திரு.S.கோபி, தஞ்சாவூர் | 7,43,960.90 | மதிப்பீட்டை விட (+) 0.18% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள, மதிப்பீட்டு தொகையான ரூ.7,42,641/-ஐ விட (-) 0.07% குறைவாக ரூ.7,42,139.90/- என்ற விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S. ரமேஷ், தஞ்சாவூர் என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.11663/2022/எம்சிஇ5)

அலுவலககுறிப்பை ஏற்க தீர்மானிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| 08.03.2024 | 660. தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண்.19க்குட்பட்ட பகுதியில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் மேற்படி பகுதி பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன்கருதி சிரில் நகர் பகுதியில் 4- எண்ணிக்கை, ஆனந்தம் நகர் பகுதியில் – 2 எண்ணிக்கை மற்றும் எம்பி நகர் பகுதியில் – 2 எண்ணிக்கை ஆக மொத்தம் 8 எண்ணிக்கையிலான தெருவிளக்கு மற்றும் மின்தடம் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2564/2024/எம்சிஇ6) | அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| 08.03.2024 | 661. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.27 மனோன்மணி நகர் பகுதியில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் தெருவிளக்கு வசதி அமைத்து தரக்கோரி மக்களுடன் முதல்வர் மனுவில் வரப்பெற்றது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் புதிதாக 7-எண்ணிக்கையிலான தெருமின்விளக்குகள் அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1,90,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி தொன்னூறாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1,90,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி தொன்னூறாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1677/2024/எம்சிஇ6) | அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| **08.03.2024** | 662. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.46 முனிசிபல் காலனி குடியிருப்பு பகுதியில் தெருவிளக்கு இல்லாத காரணத்தினால் புதிதாக தெருவிளக்கு அமைப்பதற்கு முனிசிபல் காலனி குடியிருப்பு நலச்சங்கம் சார்பில் மனு வரப்பெற்றது. எனவே மேற்படி பகுதி மக்களின் நலன் கருதி புதிதாக 4-எண்ணிக்கையிலான தெருவிளக்கு அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1,20,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1,20,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1553/2024/எம்சி.இ6) | அலுவலகக்குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |
| **08.03.2024** | 663. தஞ்சாவூர் மாநகராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.44 செல்வம் நகர் பகுதியில் தெருவிளக்கு வசதி இல்லாத காரணத்தினால் தெருவிளக்கு அமைத்து தரக்கோரி மனு வரப்பெற்றது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் புதிதாக 1 எண்ணிக்கையிலான தெருவிளக்கு அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.26,000/-க்கு (ரூபாய் இருபத்தி ஆறாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.26,000/-க்கு (ரூபாய் இருபத்தி ஆறாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2023-24ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1688/2024/எம்சி.இ6) | அலுவலகக்குறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 08.03.2024 | 664. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன் படி மாநகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II III மற்றும் IVல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் தஞ்சாவூர் மாநகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக கட்டணம் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன்படி இம்மாநகராட்சி பகுதிகளில் இயங்கி வரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக்கட்டணம் 01.04.2024ம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br><br>**<u>வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்</u>**<br><br>வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் - (1) அட்டவணைகள் I, II, III மற்றும் IVல் குறிப்பிடப்பட்டுள்ள பொது அல்லது தனியார் என எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி மாநகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ள கூடாது.<br><br>அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், தஞ்சாவூர் மாமன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம்-1ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.<br><br>தனிநபரை பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.<br><br>உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். | அலுவலககுறிப்பை அனுமதிக்க தீர்மானிக்கப்படுகிறது |

செல்லுபடியாகக்கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம்-17ல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

அட்டவணை 1ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைபாட்டினை சான்றளிக்கும் படிவம் 18ல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1)ன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் வி்ண்ணப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண்.289 உள் விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம் பிரிவு (6)ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு மாமன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் 1ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணை I, II, III மற்றும் IVல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024ம் தேதி முதல் அமுலுக்கு வரும்.

குறிப்பு:- (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31ம் தேதி முடிவடையும்.

**அட்டவணை-I**

[See rules 289 (1), (2) and (5)]

1. **பொருந்தக்கூடிய தன்மை:**

1948-ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948-ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII), 1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951-ம் 'ஆண்டு மத்தியச் சட்டம் 65) 1959ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. **உரிமக்கட்டணம் :**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம் 2006ம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27) அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

அ) விண்ணப்பதாரர் ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்கவில்லையெனில் , அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் (GST எண்) அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

ஆ) விண்ணப்பதாரர் ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து படிவம் 17ல் உள்ள பிரமாணப் பத்திரம் ஒன்றை 'அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ல் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமக்கட்டணங்களக்கான பட்டியல்.

**a) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்தபட்ச கட்டணம் (ரூ) | அதிகபட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மாநகராட்சி மாமன்றம் | 2500/- | 5000/- |

**b) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்தபட்ச கட்டணம் (ரூ) | அதிகபட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மாநகராட்சி மாமன்றம் | 5000/- | 7500/- |

**c) நடுமத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்தபட்ச கட்டணம் (ரூ) | அதிகபட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மாநகராட்சி மாமன்றம் | 8000/- | 12000/- |

**d) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்தபட்ச கட்டணம் (ரூ) | அதிகபட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மாநகராட்சி மாமன்றம் | 12500/- | 40000/- |

**வர்த்தகங்கள்/வியாபரங்களின் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| வ.எண் | வர்த்தகங்கள்/ வியாபாரங்களின் பட்டியல் : | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னனு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 3000/- | 6000/- | 10000/- | 13000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 5000/- | 10000/- | 15000/- | 20000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 5000/- | 10000/- | 15000/- | 20000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- |
| 9 | அனைத்து வகையான கொள் கலன்களையும் பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- |
| 10 | அனைத்து வகையான (மின் மோட்டார்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12000/- |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12000/- |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 5000/- | 7000/- | 10000/- | 12000/- | |
| | 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 3000/- | 5000/- | 9000/- | 12000/- | |
| | 15 | செங்கல் சூளைகள் | 3000/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள்,ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 5000/- | 8000/- | 10000/- | 13000/- | |
| | 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 21 | அனைத்து வகையன இரசாயண பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 26 | காற்றுப் பதனிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 28 | அனைத்து வகையான எழுது பொருட்களைஉற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12000/- | |
| | 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 5000/- | 7000/- | 10000/- | 15000/- | |
| | 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 36 | துப்புரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 37 | சுண்ணாம்பு கால்வாய் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 39 | அனைத்து வகையான ஆடைகள்/துணிகள்/ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 41 | அனைத்து வகையான மர/பிளைவுட்/சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 42 | அனைத்து வகையான வன்பொருள்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 43 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருடகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 47 | டீ(Tea) தூள் தயாரித்தல் | 3000/- | 5000/- | 8000/- | 12500/- | |
| | 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 2500/- | 5000/- | 8000/- | 12500/- | |

**அட்டவணை -II**

[See rules 289 (1), (2) and (5)]

**1. பொருந்தும் தன்மை:**

(1) இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

**2. பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது :-**

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.

2. 2013ம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் கீழ் (2013-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், வங்கிகள், நிதிநிறுவனங்கள்.

3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.

4. 1959-ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54) 1884ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884-ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934ம் ஆண்டு மத்திய சட்டம் XXX) மற்றும் 1952ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்

5. 2010ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23)

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ல் அட்டவணை IIல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்.

1. உரிமக்கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்) :

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்தபட்ச கட்டணம் (ரூ) | அதிகபட்ச கட்டணம்(ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மாநகராட்சி மாமன்றம் | 800/- | 15000/- |

2. வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல்:

| வ.எண் | வர்த்தகங்கள்/வியாபாரங்களின் பட்டியல் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|
| 1. | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- |
| 2. | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 3. | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- |
| 4. | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல். | 1000/- |
| 5. | அனைத்த வகையான மின் மற்றும் மின்னனு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- |
| 6. | அனைத்து வகையான மின் மற்றம் மின்னனு சர்வீஸ் மையங்கள் | 2000/- |
| 7. | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- |
| 8. | கழிவுத்தாள் கடை/பழைய வேண்டாத பொருட்கள் | 5000/- |
| 9. | நூற்பு வேலைகள் | 5000/- |
| 10. | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- |
| 11. | காற்று பதனிகளை பழுது பார்த்தல் (Air conditioner) | 1000/- |
| 12. | காற்றழுத்திகள் (Air compressors) | 2000/- |
| 13. | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- |
| 14. | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Machines) | 2000/- |
| 15. | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 1000/- |
| 16. | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 5000/- |
| 17. | தலைக்கவச கடைகள் | 1000/- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 18. | இரு சக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 2000/- | | |
| | | 19. | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 3000/- | | |
| | | 20. | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 21. | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |
| | | 22. | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |
| | | 23. | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 24. | அனைத்து வகையான இரசாயணப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 25. | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 26. | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 10000/- | | |
| | | 27. | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல். | 3000/- | | |
| | | 28. | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |
| | | 29. | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardwares) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |
| | | 30. | அனைத்து வகையான ஆட்டோபேமாபலைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |
| | | 31. | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 32. | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 33. | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |
| | | 34. | அனைத்து வகையான வீட்டு உபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 35. | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 36. | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | | |
| | | 37. | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (தளவாட சாமான்கள்) | 1000/- | | |
| | | 38. | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | | |
| | | 39. | அனைத்து வகையான ஆடைகள்/துணிகள்/ஜவுளிகளை சேமித்து வைத்தல் | 5000/- | | |
| | | 40. | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள்/ டயர்களையும் சேமித்து வைத்தல் | 5000/- | | |
| | | 41. | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 42. | அனைத்து வகையான அறைகலன்களையும் (Furnitures) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 43. | அனைத்து வகையான மர / பிளைவுட்/சன்மைக்கா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | | |
| | | 44. | மர வடிவமைப்புகள் விற்பனை | 5000/- | | |
| | | 45. | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 2000/- | | |
| | | 46. | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | | |
| | | 47. | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | | |
| | | 48. | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 49. | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | |
| | | 50. | அழைப்பிதழ்கள்/வாழ்த்து அட்டை விற்பனை/ அச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 2000/- | |
| | | 51. | மருந்துக்கடைகள் | 2000/- | |
| | | 52. | மருத்துவ உபகரணங்கள்/சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | |
| | | 53. | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | |
| | | 54. | எரியக்கூடிய பொருட்கள், ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | |
| | | 55. | புல் மற்றும் வைக்கோலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | |
| | | 56. | முட்டுக்கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல். | 1000/- | |
| | | 57. | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | |
| | | 58. | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |
| | | 59. | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 2000/- | |
| | | 60. | வாகன நிறுத்த நிலையங்கள் | 3000/- | |
| | | 61. | திரைப்பட ஆய்வகங்கள் | 5000/- | |
| | | 62. | பார்சல் புக் செய்யுமிடங்கள்/தூதஞ்சல் (Courier) சேவைகள் | 5000/- | |
| | | 63. | கேபிள் டி.வி. சேவைகள் | 5000/- | |
| | | 64. | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | |
| | | 65. | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 1000/- | |
| | | 66. | பட்டாணி வறுவல் | 1000/- | |
| | | 67. | பேன்சி ஸ்டோர் | 1000/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 68. | பஞ்சு மெத்தை/தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |
| | | 69. | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 1000/- | |
| | | 70. | பல்பொருள் அங்காடி | 15000/- | |
| | | 71. | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ-சேவை மற்றும் இணைய நிலையம் | 1000/- | |
| | | 72. | ஸ்டிக்கர் கடைகள் | 1000/- | |
| | | 73. | தாவர நாற்றங்கால் கடைகள் | 1000/- | |
| | | 74. | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 1000/- | |
| | | 75. | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 1000/- | |
| | | 76. | பொற்கொல்லர்கள் | 1000/- | |
| | | 77. | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 2000/- | |
| | | 78. | டைல்ஸ்/மார்பிள்கள்/கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | |
| | | 79. | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000/- | |
| | | 80. | முடி வெட்டும் நிலையங்கள் | 1000/- | |
| | | 81. | அழகு நிலையங்கள்/தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத/ஸ்பாஸ் (Spa's) | 2000/- | |
| | | 82. | தையல் கடைகள் | 1000/- | |
| | | 83. | சலவையகங்கள் | 800/- | |
| | | 84. | வினைல் போர்டு கடைகள் | 2000/- | |
| | | 85. | காலணி கடைகள் | 2000/- | |
| | | 86. | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுது பார்த்தல்) | 2000/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 87. | மிதி வண்டி மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 2000/- | |
| | | 88. | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 1000/- | |
| | | 89. | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 5000/- | |
| | | 90. | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theatre) | 1000/- | |
| | | 91. | அச்சகங்கள் | 2000/- | |
| | | 92. | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 2000/- | |
| | | 93. | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 2000/- | |
| | | 94. | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 2000/- | |
| | | 95. | நெல் அவித்தல் | 5000/- | |
| | | 96. | மரம் அறுக்கும் ஆலைகள் | 3000/- | |
| | | 97. | FCS ஆலைகள் (Farm and Commercial Storage Manufacturing) | 1000/- | |
| | | 98. | அரிசி ஆலைகள் | 3000/- | |
| | | 99. | பாக்கெட்டில் போடப்பட்ட இறைச்சிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |
| | | 100. | கோழி இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |
| | | 101. | ஆட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |
| | | 102. | கோழி இறைச்சி/ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | |
| | | 103. | மாட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |
| | | 104. | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (மீன், கருவாடு, நண்டு, இறால்) | 2000/- | |
| | | 105. | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 2000/- | |
| | | 106. | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |
| | | 107. | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 108. | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | | |
| | | 109. | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000/- | | |
| | | 110. | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | | |
| | | 111. | மருத்துவ ஆய்வகங்கள் | 3000/- | | |
| | | 112. | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 1000/- | | |
| | | 113. | அனைத்து வகையான கால்நடைகள்/பறவைகள் தீவணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000/- | | |
| | | 114. | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 1000/- | | |
| | | 115. | பால் மற்றும் பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 4000/- | | |
| | | 116. | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | | |
| | | 117. | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000/- | | |
| | | 118. | பேக்கரிகள் | 3000/- | | |
| | | 119. | பழச்சாறு கடைகள் | 1000/- | | |
| | | 120. | AMF (Assured Minimum Facility) உடன் டீ கடைகள் | 2000/- | | |
| | | 121. | நீர் வாழ்வன காட்சி சாலை (Aquarium) | 1000/- | | |
| | | 122. | ஊறவைத்த தானியங்களை அரைத்தல் | 1000/- | | |
| | | 123. | சுற்றுலா மற்றும் Travel Agency நடத்துதல் | 2000/- | | |
| | | 124. | மண் அள்ளும் இயந்திரங்கள் | 2000/- | | |
| | | 125. | கட்டிட பொருட்களை வாடகைக்கு விடுதல் | 2000/- | | |

| | | |
|---|---|---|
| | **அட்டவணை- III**<br>[See rules 289 (1), (2) and (7)]<br>(1) **பொருத்தம் தன்மை** :- இந்த அட்டவணை-கீழ்கண்ட பொது காரியங்களுக்காக பயன்படுத்தப்படும் கட்டிடங்கள்<br>(1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.<br>(2) 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர வாடகை அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும்<br>(3) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள், அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கூட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிற அனைத்து பொதுக்கட்டிடங்களுக்கும் பொருந்தும்.<br>**2) உரிம கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**<br>(1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.<br>விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ. 1500/- அதிகப்பட்ச கட்டணம் – ரூ.20000/- (ஒரு வருடத்திற்கான கட்டணம்) | |

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள் | சிற்றுண்டிச் சாலை – 2000/-<br>சிறிய உணவகம் (ஹோட்டல்)-3000/-<br>உணவுக் கூடங்கள் (பெரிய ஹோட்டல்) – 5000/- |

(II) 2024-ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள்.

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.2500/- அதிகப்பட்ச கட்டணம் – ரூ.5000/- (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 2014-ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | சிறியது- 3000/-<br>பெரியது-5000 |

(iii) 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள்

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம்

குறைந்தபட்சம் ரூ.4000/- அதிகபட்ச கட்டணம் – ரூ.40000/-

(ஒரு வருடத்திற்கான கட்டணம்) :

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம்,அடுக்குமாடி குடியிருப்புகள் | i) 5000/- upto 10 Rooms<br>ii) 10000/- upto 25 Rooms<br>iii) 15000 25 and above rooms |

(iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள்.

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.4000/- அதிகப்பட்ச கட்டணம் – ரூ.40000/-

(ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| திருமண மண்டபங்கள் | 10000/- |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | 5000/- |

**அட்டவணை- IV**

[See rules 282 (11), 286 (2) and 286 (2)]

**i) தனியார் வாகன நிறுத்தகங்கள் மற்றும் நிலையங்கள் நடத்துதல்**

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ. 2500/- அதிகப்பட்ச கட்டணம் – ரூ.40000/-

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| தனியார் வாகன நிறுத்தங்கள் மற்றும் நிலையங்கள் நடத்துதல் | 5000/- |

**ii)** தனியார் மிருகவதை கூடம் நடத்துதல்

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ. 2500/- அதிகப்பட்ச கட்டணம் – ரூ.25000/-

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் நிர்ணயம் செய்யப்பட்டும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| தனியார் மிருகவதை கூடம் நடத்துதல் | 5000/- |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை 01.04.2024ம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமங்கள் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள உரிமக்கட்டண விபரங்களை மாமன்றம் பரிசீலித்து நிர்ணயம் செய்யலாம்.<br>ந.க.எண்.2886/2024/எச்.5 | |

நாள் : **11.03.2024**
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ சண்.இராமநாதன்,
மேயர்.

// உண்மை நகல் //

**மேயர்,**
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், வளர்ச்சி பிரிவு, தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
,, சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
,, அலுவலக விளம்பர பலகை.